1951-52ன் ரயில்வேக்களின் வருமானம்; செலவு:

இந்திய சர்க்கார் ரயில்வேக்களின் மொத்த போக்கு வரத்து வருமானம் ரூ. 290.82 கோடி. 1950-51ல் கிடைத்ததைக் காட்டிலும் ரூ. 27.81 கோடி அதிகம். பிரயாணிகள் கட்டணத்தின் மூலம் ரூ. 109.88 கோடி. சாமான்கள் போக்கு வரத்து மூலம் ரூ. 156.79 கோடி. இதர வகை இனங்கள் மூலமாக ரூ. 24.15 கோடி.

நிர்வாக செலவு ரூ. 194.04 கோடி. 1950-51லைக் காட்டிலும் ரூ. 13.81 கோடி அதிகம். தேய்மான நிதிக்கு ரூ. 30.21 கோடி. அதில் சித்தரஞ்சன் இஞ்சின் தொழிற்சாலை தேய்மானச் செலவுக்காகவும். தேய்மானம், இதர எல்லா செலவுகளையும் கொடுத்தது போக 1951-52ல் நிகர வருமானம் ரூ. 61.75 கோடி. இதில் ரூ. 33.41 கோடி டிவிடெண்டாக பொது வருமான இனத்தில் சேர்க்கப்பட்டது. ஒதுக்கப்பட்ட வகையில் ரூ. 28.34 கோடி நிகர மிச்சம். 1950-51ல் ரூ. 15.05 கோடி தான் நிகர மிச்சம். 1949-50ல் ரூ. 14.59 கோடி. மேற்கூறிய மிச்சத்தில் ரூ. 10 கோடி அபிவிருத்தி நிதிக்கும் ரூ. 18.34 கோடி ரிஸர்வ் நிதிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

1951-52ல் மொத்தம் 12320 லட்சம் பேர்கள் ரயிலில் பிரயாணம் செய்தனர். 1950-51ல் மொத்தம் 13080 லட்சம் பேர்.

1951-52ல் 3 ஜனதா எக்ஸ்பிரஸ் அறிமுகமாக விடப்பட்டன. 231 இஞ்சின் பெட்டிகளும் 188 சரக்குப் பெட்டிகளும் புதிதாக சேர்க்கப்பட்டன. 6631 மூன்றாம் தர வகுப்புகள் பெட்டிகளில் பொருத்தப்பட்டன.

1952 மார்ச் 31 வரை மொத்த மூலதனச் செலவு 861.55 கோடி. 1951-52ல் ரூ. 23.39 கோடி மூலதனச் செலவுக்கு ஒதுக்கப்பட்டது. பாரதத்தில் காந்த்லா-காண்டலா ரயில் பாதையும் வங்கத்தில் ஒரு ரயில் பாதையும் திறக்கப்பட்டன. பெரம்பூரில் ரயில்வே பெட்டி பாக்டரி அமைக்க திட்டமும் அங்கீகாரம் அளிக்கப்பட்டது. இதற்கு சுமார் ரூ. 4.5 கோடி செலவாகும்.

1952 மார்ச் 31 வரை ரயில்வேயில் மொத்தம் 929448 ஊழியர்கள் இருந்தனர். அதற்கு முந்திய வருஷம் 917368 ஊழியர்கள் இருந்தனர். இதில் ரயில்வேக்களில் ஊழியர்களுக்கு பாரதத்தில் வருஷத்தில் ரூ. 122.25 கோடி சம்பளம். கூட்டு போனஸ் திட்டம் முதலியவற்றை அமல் செய்ததால் தான் சம்பளம் அதிகரித்தது. பாரதத்தில் ஊழியர்களுக்காக 1458 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன.

பாரதத்தில் ரயில்வே தொழிலாளர்-நிர்வாகிகள் உறவு மொத்தத்தில் சுமுகமாய் இருந்தது. இந்திய வருஷத்தை விட ஒப்புநோக்கும் போது பாரதத்தில் குறைவு.

ரிசர்வ் பாங்கின் கூட்டுறவு பாங்குகளின் கொள்கை

குறைந்த வட்டிக்கு ரிசர்வ் பாங்கிடம் இருந்து கூட்டுறவு பாங்குகள் குறைந்த வட்டிக்கு பணம் வாங்கி, அதை அதிக வட்டிக்கு விவசாயிகளுக்கு கடனாகக் கொடுக்கின்றன. விவசாய காரியங்களுக்கு பாங்கு விகிதத்தை விட இரண்டு சதவிகிதம் குறைவான வட்டிக்கு கூட்டுறவு பாங்குகளுக்கு ரிசர்வ் பாங்கு கொடுக்கிறது. இந்த கூட்டுறவு பாங்குகள் விவசாயிகளுக்கு கடன் கொடுக்கும் போது அதிக வட்டி வாங்குகின்றன. பம்பாய் 5%, உ.பி., மேற்கு வங்கம் 12 முதல் 15 சதம் வரை; ஹைதராபாத் 9 முதல் 20 சதம் வரை; ராஜஸ்தானில் 7½ முதல் 25 சதவிகிதம் வரையும் கூட்டுறவு பாங்குகள் வட்டி வாங்குகின்றன. இதை கட்டுப்படுத்த ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமா என்று ஸ்ரீ மந்திரி தேஷ்முக் யோசிக்கிறாரா? [illegible] [illegible]